**SET – 4**

**Series : TYM**

**Code No. 10**

**Roll No.** | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற 8 பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
- இந்த வினாத்தாளில் 16 வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- எழுதத் தொடங்குவதற்கும் முன் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.
- வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15க்குக் கொடுக்கப்படும். 10.15இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டம் படிக்கவேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப்பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains **8** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **16** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# TAMIL

*Time allowed : **3** hours* *Maximum Marks : **80***

பகுதி – அ (படித்தல்)

**SECTION – A (Reading) Marks 15**

1. பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை தருக. **5 × 1 = 5**

அணுக்கள் நமது இயல்பான கண்களால் காணமுடியாதபடி மிக மிகச்சிறியதாக உள்ளது. ஆனாலும் அணுவின் உள் அமைப்பைப் பற்றி பல ஆய்கள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. அணு அறிவியல் துறையில் முன்னோடியாக விளங்கிய தாம்ஸன் 1897-இல் அணுவில் எலக்ட்ரான் என்ற துகளைக் கண்டுபிடித்தார். இது அணுவை நாம் மேலும் பிரிக்கலாம் என்பதை வெளிப்படுத்தியது. பின்னர் ரூதர்போர்ட்

என்பவர் 1911 இல் ஒரு அணுவின் பொருள் திணிவு முழுவதும் அதன் மையப் பகுதியிலுள்ள கருவில் அடங்கியுள்ளது என்றும், அந்தக் கருவினை மையமாகக் கொண்டு எலக்ட்ரான்கள் அதிவேகத்தில் சுற்றி வருகின்றன என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் புரோட்டான்கள் என்ற துகள்கள் அனைத்துவகை அணுக்களின் உள் அமைப்பில் இடம் பெற்றுள்ளன என்ற உண்மையையும் வெளியிட்டார். 1932 இல் சர்.ஜேம்ஸ்சாட்விக் என்ற இங்கிலாந்து விஞ்ஞானி நியூட்ரானைக் கண்டுபிடித்தார். இவ்வாறு அணுவின் அமைப்பில் எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் ஆகிய மூன்று துகள்கள் இடம் பெற்றுள்ள என்பது அறியப்பட்டது.

வினாக்கள் :

(i) அணுக்கள் எத்தகையவை ?
(அ) மிக மிகப் பெரியவை (ஆ) மிக மிகச் சிறியவை
(இ) இயல்பானவை (ஈ) கடினமானவை

(ii) எலக்ட்ரான் துகளைக் கண்டுபிடித்தவர்
(அ) வில்லியம் (ஆ) அரிஸ்டாட்டில்
(இ) தாலமி (ஈ) தாம்சன்

(iii) இங்கிலாந்து விஞ்ஞானி
(அ) சர் ஜேம்ஸ் சாட்விக் (ஆ) தாம்சன்
(இ) ஐன்ஸ்டீன் (ஈ) லியோனி

(iv) அணுவில் அமைந்துள்ள துகள்களின் எண்ணிக்கை
(அ) இரண்டு (ஆ) ஐந்து
(இ) மூன்று (ஈ) நான்கு

(v) 1932– இல் அணுவில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்
(அ) எலக்ட்ரான் (ஆ) நியூட்ரான்
(இ) இரும்பு (ஈ) புரோட்டான்

2. பின்வரும் பகுதியைப் படித்துகொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு வினாக்களுக்கு விடை தருக. **5 × 1 = 5**

தமிழகத்தின் வளர்ச்சிக்கான உந்துதலாகவும் பொருளாதார நலத்தின் அடிப்படையாகவும் வர்த்தகம் கருதப்பட்டது. பயிரிடுதல், உற்பத்தி, வர்த்தகம், வரைகலை, கல்வி மற்றும் சிறபக்கலை ஆகியவற்றைப் பழங்கால இலக்கியங்கள் முக்கியமான பொருளாதார நடவடிக்கைகளாகக் குறிப்பிடுகின்றன. இந்தப் பட்டியல் கலாசார முன்னுரிமைகளைப் பற்றியும் இந்தப் பகுதியில் நிலவிய சூழலைப் பற்றியும் ஒரு சித்திரைத்தை அளிக்கிறது. ஆனால் அறிஞர்களும் உரையாசிரியர்களும் விவசாயமும் வர்த்தகமும்தான் இரண்டு முக்கியப் பொருளாதார நடவடிக்கைகளாக இருந்தன என்று குறிப்பிடுகிறார்கள். ஒப்பீட்டளவில் இவை இரண்டுமே பொருளாதாரத்தில் அதிகப் பங்கை வகித்தன.

உதாரணமாக, அப்போதைய புலவர்கள் விவசாயத்தின் மூலமும் வர்த்தகத்தின் மூலமும் செல்வந்தரானவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். விவசாயத்தை வணிகத்தோடு இணைப்பது, மிகப் பெரிய துரையான விவசாயத்தின் மூலம் கிடைக்கும் உபரிவளங்களை வர்த்தகத்தின் மூலம் திரட்டி பொருளாதார நடவடிக்கைகளுக்குத் தேவையான மூலதனமாக மாற்றும் நடைமுறையில் இருந்தைக் குறிக்கிறது. மிகவும் வளர்ச்சியடைந்த வர்த்தகம் உள்நாட்டில் முன்னேற்றமடைந்த பொருளாதாரத்துடன் சேர்ந்தே இயங்கியது.

வினாக்கள் :

(i) எதன் அடிப்படையாக வர்த்தகம் கருதப்பட்டது ?
(அ) விற்பதன் நோக்கம் (ஆ) இலாபநோக்கம்
(இ) பொருளாதார நலம் (ஈ) சுயநலம்

(ii) முக்கியப் பொருளாதார நடவடிக்கைகள்
(அ) மனிதநேயம், பொருள்தரம் (ஆ) சுயநலம், பிறர்நலம்
(இ) இலாபம், பணம் (ஈ) விவாசாயம், வர்த்தகம்

(iii) விவசாயத்தை எதனோடு இணைத்தார்கள் ?
(அ) வணிகத்தோடு (ஆ) உற்பத்தியோடு
(இ) இலாபத்தோடு (ஈ) கணக்கோடு

(iv) வர்த்தகம் பற்றிக் குறிப்பிடும் இலக்கியம்
(அ) தற்கால இலக்கியம் (ஆ) பழங்கால இலக்கியம்
(இ) ஓவியக் கலைகள் (ஈ) சிற்பங்கள்

(v) தமிகத்தின் வளர்ச்சிக்கு அடிப்படை
(அ) உற்பத்தியைப் பெருக்குதல் (ஆ) பணம் அச்சிடுதல்
(இ) பொருளாதாரம் (ஈ) வர்த்தகம்

3. பின்வரும் பகுதியைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி வரைக. **5 × 1 = 5**

முத்தமிழ் என்ற வழக்கு மிகத் தொன்மையானது. தொல்காப்பிய மெய்ப்பாட்டியல், நாடகக் கலைஞர்கள் வெளிப்படுத்த வேண்டிய நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டு மெய்பாடுகளையும், அவை தோன்வதற்கு வேண்டும் நிலைக்களன்களையும் குறிப்பிட்டுள்ளது. வேடாந்தாங்கி நடிப்போர் 'பொருநர்' எனப்பட்டனர். விறல்பட ஆடும் பெண்கலைஞர் விறலியர் எனப்பட்டனர். அன்று, நாடகங்கள் நடிப்பதற்கே எழுதப்பட்டன; படிப்பதற்கு அன்று. இக்கலையை வாழ்க்கைக் கருவியாகக் கொண்ட ஒரு பிரிவினர் இருந்தனர். நாடக நூல்கள் அவர்களிடமே இருந்தன. பிற்காலத்தில் நாடகக் கலைஞர்கள் புறக்கணிக்கப்பட்டனர். எனவே, அவர்கள் தம் தொழிலைக் கைவிட்டனர். நாடக இலக்கண நூல்களின் சிற்சில பகுதிகளை உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். இவற்றின் வழியே அக்கால நாடகத்தின் இயல்புகளை ஒருவாறு உணரலாம்.

## *பகுதி – ஆ (எழுதுதல்)*
## SECTION – B (Writing) Marks 14

4. *உங்கள் பகுதியில் பேருந்து நிழற்குடை ஒன்று அமைத்துத் தருமாறு வேண்டி சென்னை மாநகராட்சி ஆணையர்க்குக் கடிதம் ஒன்று எழுதுக.* **1 × 6 = 6**

***(அல்லது)***

*கல்வியின் இன்றியமையாமை குறித்து வெளியூரில் விடுதியில் தங்கிப் படிக்கும் உன் நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக.*
*(எக்கடிதமாயினும் உன் முகவரி ம. மாதவன்/ம. மாதவி, எண் : 20, கள்ளழகர் வீதி, மயிலை-5 எனக் கொள்க).*

5. *ஏதேனும் ஒன்றை விவரித்துக் கட்டுரை வரைக.* **1 × 8 = 8**
   (i) *முன்னுரை-கூடி வாழ்ந்தால் கோடி நன்மை-ஒற்றுமையே பலம்-பிற நாட்டவரின் நுழைவு-வேற்றுமையில் ஒற்றுமை-தேசியம் காப்போம்-இளைஞர்கள் கடமை-முடிவுரை.*
   (ii) *முன்னுரை-மழை வளம்-நீரைப் பாதுகாத்தல்-மழை பொழிவதில் மரங்களின் பங்கு-மழையின்றி உயிர்கள் இல்லை-காடுகளின் வளம் காப்போம்-ஆறு ஏரிகளின் பயன்கள்-முடிவுரை.*
   (iii) *முன்னுரை-உடற்பயிற்சி=உடலோம்புதலின் இன்றியமையாமை-உடல் நலம் காப்பதில் உடற்பயிற்சியின் பங்கு-வயதிற்கேறற் பயிற்சிகள்-முறையான பாதை-போட்டிகளில் பங்கு பெறுதல்-முடிவுரை.*

## *பகுதி – இ (இலக்கணம்)*
## SECTION – C (Grammar) Marks 15

6. *சான்றுதருக. (மூன்றனுக்கு மட்டும்)* **3 × 1 = 3**
   (i) *பெயரெச்சம்*
   *(அ) சென்ற மாணவன்* *(ஆ) குதிரை ஓடியது*
   *(இ) தாமரை* *(ஈ) ஓடியது குதிரை*
   (ii) *உருவகம்*
   *(அ) மலர்* *(ஆ) மலர்ப்பாதம்*
   *(இ) பாதமலர்* *(ஈ) பாதம்*
   (iii) *நிரைகவர்தல்*
   *(அ) காஞ்சி* *(ஆ) கரந்தை*
   *(இ) வஞ்சி* *(ஈ) வெட்சி*
   (iv) *காலத்தினால் வந்த குறிப்பு வினைமுற்று*
   *(அ) அவன் பொன்னன்* *(ஆ) அவன் நல்லன்*
   *(இ) அவன் மதுரையான்* *(ஈ) அவன் சித்திரையான்*
   (v) *கருவிளம்*
   *(அ) கரும்பு* *(ஆ) கறவை*
   *(இ) கரும்பலகை* *(ஈ) கருவறை*

7. நிரப்புக. (மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) ஒரு சொல் இருபொருள்பட அமைந்து வருதல் ..............

(அ) வஞ்சப்புகழ்ச்சியணி (ஆ) இரட்டுற மொழிதல் அணி

(இ) பின்வருநிலையணி (ஈ) தற்குறிப்பேற்ற அணி

(ii) ஒரு சீரைப் பிரித்து அசை பார்ப்பது ........... எனப்படும்.

(அ) வெண்பா (ஆ) பொது இலக்கணம்

(இ) ஈற்றுச்சீர் (ஈ) அலகிடுதல்

(iii) விடை வகை ........... வகைப்படும்.

(அ) ஒன்பது (ஆ) ஆறு (இ) ஏழு (ஈ) எட்டு

(iv) உவம உருபு வெளிப்பட வருவது ........... ஆகும்.

(அ) விரியுவமை (ஆ) தொகையுவமை

(இ) உருவகம் (ஈ) உருபுகள்

(v) ஔவை என்பதில் 'ஔ' ........... மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்

(அ) அரை (ஆ) இரண்டு (இ) ஒன்றரை (ஈ) ஒன்று

8. கூறியவாறு மாற்றுக. (மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) அருளரசு (வினைமுற்றாக்குக)

(அ) வந்து நின்றான் (ஆ) அருள் வந்து

(இ) வந்த அருளரசு (ஈ) அருளரசு வந்தான்

(ii) நாட்டைக் காக்க போர்க்களம் சென்றனர் (ஒன்றொழிப் பொதுச் சொல்லாக்குக)

(அ) நாட்டைக் காக்க ஐவர் போர்க்களம் சென்றனர்

(ஆ) நாட்டைக் காக்க ஆண்கள் போர்க்களம் சென்றனர்

(இ) நாட்டைக் காக்க பெண்கள் போர்க்களம் சென்றனர்

(ஈ) நாட்டைக் காக்கச் சென்றனர்

(iii) ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் வருவது (எவ்வகைப் பா என எழுதுக).

(அ) ஆசிரியப்பா (ஆ) கலிப்பா

(இ) வஞ்சிப்பா (ஈ) வெண்பா

(iv) வந்தேன் (ஈற்றுச்சீர் வாய்பாடு எழுதுக)

(அ) பிறப்பு (ஆ) காசு (இ) நாள் (ஈ) மலர்

(v) முள்+தீது (சேர்த்து எழுதுக)

(அ) முள்தீது (ஆ) கஃறீது (இ) முஃடீது (ஈ) முட்டீது

9. இலக்கணக் குறிப்பு எழுதுக. (மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) படம் பார்த்தான்

(அ) தனிமொழி (ஆ) அடுக்குத்தொடர்

(இ) பொதுமொழி (ஈ) தொடர்மொழி

(ii) வருக! வருக!

(அ) விரைவு – அடுக்குத்தொடர் (ஆ) சினம் ¯ அடுக்குத்தொடர்

(இ) அச்சம் ¯ அடுக்குத்தொடர் (ஈ) மகிழ்ச்சி ¯ அடுக்குத்தொடர்

(iii) தேன் தமிழ்

(அ) உவமை (ஆ) உருவகம் (இ) அகம் (ஈ) புறம்

(iv) கடலும் கடல் சார்ந்த இடமும்

(அ) மருதநிலம் (ஆ) முல்லைநிலம்
(இ) நெய்தல்நிலம் (ஈ) பாலைநிலம்

(v) அறியாமை

(அ) கூவிளங்காய் (ஆ) புளிமாங்காய்
(இ) கருவிளங்காய் (ஈ) தேமாங்காய்

10. சரியான தொடரைத் தேர்வு செய்க. (மூன்றனுக்கு மட்டும்) **3 × 1 = 3**

(i) (அ) தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஔகாரக் குறுக்கம் எனப்படும்.
(ஆ) தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக் குறுக்கம் எனப்படும்.
(இ) தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும் ஐகாரம் மகரக் குறுக்கம் எனப்படும்.
(ஈ) தன் மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஆய்தக் குறுக்கம் எனப்படும்.

(ii) (அ) இரட்டித்தே நின்று பிரித்தால் பொருள் தராத சொற்கள் அடுக்குத்தொடர் எனப்படும்
(ஆ) இரட்டித்தே நின்று பிரித்தால் பொருள் தராத சொற்கள் பண்புப்பெயர் எனப்படும்
(இ) இரட்டித்தே நின்று பிரித்தால் பொருள் தராத சொற்கள் புணர்ச்சி எனப்படும்
(ஈ) இரட்டித்தே நின்று பிரித்தால் பொருள் தராத சொற்கள் இரட்டைக் கிளவி எனப்படும்

(iii) (அ) கருமை + விழி = கருவிழி என்பது மகரப் புணர்ச்சி
(ஆ) கருமை + விழி = கருவிழி என்பது பண்புப்பெயர்ப் புணர்ச்சி
(இ) கருமை + விழி = கருவிழி என்பது திசைப்பெயர்ப் புணர்ச்சி
(ஈ) கருமை + விழி = கருவிழி என்பது ஔகாரக் குறுக்கம்

(iv) (அ) கைக்கிளை என்பது ஒருதலைக் காலம்
(ஆ) கைக்கிளை என்பது பொருந்தாக் காலம்
(இ) கைக்கிளை என்பது வெட்சித்திணை
(ஈ) கைக்கிளை என்பது பாடாண்திணை

(v) (அ) செய்யுளில் ஒரே பொருள்தரும் பல சொற்கள் வருவது சொற்பொருள் பின்வருநிலையணி
(ஆ) செய்யுளில் ஒரே பொருள்தரும் பல சொற்கள் வருவது சிலேடையணி
(இ) செய்யுளில் ஒரே பொருள்தரும் பல சொற்கள் வருவது பொருள் பின்வருநிலையணி
(ஈ) செய்யுளில் ஒரே பொருள்தரும் பல சொற்கள் வருவது வஞ்சப்புகழ்ச்சி அணி

## பகுதி – ஈ (இலக்கியம்)
## SECTION – D (Literature) Marks 36

11. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கேற்ற விடையை எழுதுக. **5 × 1 = 5**

அம்பேத்கர் மேலைநாடுகளில் கல்வி பயின்றபோது புகழ்வாய்ந்த பேராசிரியர் பலருடன் நட்புக் கொண்டிருந்தார். இவர் எழுதிய 'இந்தியாவின் தேசியப் பங்குவீதம்' என்னும் நூலைப் பொருளாதாரத்துறையின் சிறந்த நூலாகக் கருதிப் பொருளியல் வல்லுநர்களும் பேராசிரியர்களும் பெரிதும் மதித்துப் போற்றினார்கள். பொருளியலில் பெரும்புலமை பெற்று விளங்கியதால், பல்வேறு பொருளாதாரச் சிக்கல்களை அணுகியும் நுணுகியும் ஆராய்ந்து பார்க்க அவரால் இயன்றது; தொழில்துறையில் பொருளாதார வளர்ச்சிபெறப் புதுப்புதுக் கருத்துகளை வெளிப்படுத்தினார்.

புதியன சிந்திப்பதும் படைப்பதுமே புத்துலகம் சமைக்கும் சிற்பிகளின் நோக்கம். இந்திய நாட்டின் சாதி என்னும் இருளை அகற்ற வந்த அறிவுக்கதிர் அம்பேத்கர். சாதி என்பது எல்லாம் வல்ல ஒருவன் கட்டளையால் தோன்றியதன்று. குறிப்பிட்ட சில சூழ்நிலைக்கு ஆட்பட்ட மனித சமூகவாழ்வில் தானாகவே வேரூன்றிவிட்ட வளர்ச்சியாகும். சாதி களையப்பட வேண்டிய களை என்று அவர் கருதினார்.

வினாக்கள் :

(i) அம்பேத்கர் எழுதிய நூலின் பெயர் என்ன?

(ii) சிற்பிகளின் நோக்கம் யாது?

(iii) களையப்பட வேண்டிய களை என்று அம்பேத்கர் எதனைக் கருதினார்?

(iv) அம்பேத்கர் எழுதிய நூலை அனைவரும் ஏன் போற்றினார்கள்?

(v) பொருளாதாரச் சிக்கல்களின்போது அவரால் எதனால் புதுப்புதுக் கருத்துகளை வெளிப்படுத்த முடிந்தது?

12. பின்வரும் செய்யுளின் அடியிற் காணும் வினாக்களுக்குச் சரியான விடை தேர்ந்து எழுதுக. **4 × 1 = 4**

நல்லதாய் தந்தைஏவ நானிது செயப்பெற் றேனென்று
ஒல்லையில் விரைந்து தோட்டத் துள்புக்குப் பெரியவாழை
மல்லலம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள ராவொன்று
அல்லலுற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே.

வினாக்கள் :

(i) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
(அ) கம்பராமாயணம் (ஆ) சிலப்பதிகாரம்
(இ) பெரியபுராணம் (ஈ) சீவகசிந்தாமணி

(ii) வாழை இலை பறிக்கச் சென்றவர் யார்?
(அ) இளைய திருநாவுக்கரசு (ஆ) மூத்த திருநாவுக்கரசு
(இ) திருநாவுக்கரசர் (ஈ) பெற்றோர்

(iii) அரவு – பொருள் தருக.

(அ) சத்தம் (ஆ) பாம்பு

(இ) அன்பு (ஈ) அரவணைப்பு

(iv) தாய் தந்தை எப்படிப்பட்டவர்கள்?

(அ) தீயவர்கள் (ஆ) நல்லவர்கள்

(இ) படித்தவர்கள் (ஈ) படிக்காதவர்கள்

13. பின்வரும் குறட்பாக்களில் உள்ள கோடிட்ட இடங்களைச் சரியான சொற்களால் நிரப்புக. **4 × ½ = 2**

(i) உலகத்தோ டொட்ட ………… பலகற்றும்
………… அறிவிலா தார்.

(ii) செறுநரைக் காணின் ………… இறுவரை
காணின் ………… தலை.

14. எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடை தருக. **2 × 4 = 8**

(i) கங்கையின் மறுகரை அடைந்த குகனிடம் இராமன் கூறியவற்றைத் தொகுத்தெழுதுக.

(ii) பொருள்செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

(iii) தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக.

(iv) (அ) மாணிக்கவாசகர் – குறிப்பு வரைக.
(ஆ) மாணிக்கவாசகர், இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார்?

15. எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடையளி. **2 × 5 = 10**

(i) பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றை எழுதுக.

(ii) மேடைப்பேச்சு அமைவதற்கான சிறந்த வழிவகைகள் யாவை?

(iii) தமிழரின் மருத்துவ அறிவுகுறித்துக் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(iv) வள்ளலார் அருளிய பாடல்கள் பற்றியும் தமிழ்ப்பற்றுக் குறித்தும் விளக்கி எழுதுக.

(v) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

16. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக. **1 × 7 = 7**

(i) பாரதரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன்

(ii) குறட்டை ஒலி

(iii) அன்றாட வாழ்வில் சட்டம்

---